Koviloor Digital Library

கற்பக விநாயகக் கவசம்

ரெங்க. லெ. வள்ளியப்பன்



A.No. 15471
Q1-4173

Koviloor Digital Library

Koviloor Digital Library



3-2

கற்பக விநாயகக் கவசம்

ரெங்க லெ. வள்ளியப்பன்



Q1-4173



எல்கேஎம் பப்ளிகேஷன்
33/4, (15/4) ராமநாதன் தெரு,
தி.நகர், சென்னை – 17.
தொலைபேசி : 24361141 / 24340599

Koviloor Digital Library

முதற்பதிப்பு : டிசம்பர் 2012

© உரிமை ஆசிரியருக்கு

விலை : ரூ.6/-

அன்பின் வணக்கம்

அன்பர்களே!

சின்ன வயதிலிருந்தே பிள்ளையார்பட்டிக்குப் போவ தென்றால் அப்படியொரு பிரியம்.

இயற்கை சூழ்ந்த பேரழகுக் கோவிலில் எம்குலக் கடவுளின் முன்னால் நிற்பதில் ஏதோ சொல்லுதற்கரிய இன்பம் இருப்பது புரிகிறது.

வாழ்வின் சாரம் என்பது அன்பின் பரிவர்த்தனையில் மட்டுமே அடங்கி இருப்பதாக நான் அறிகிறேன்.

நம் அன்பைப் பாடலின் மூலம் பெருமானிடத்திலே அறிவிப்பதையே நான் பிரார்த்தனை எனக் கருதுகிறேன்.

பாடி வழிபடும்போது, ஆண்டவனோடு நாம் ஒன்று கலந்து இன்னும் உறவு பலப்படுவதை என்னால் உணர முடிகிறது.

மனதிற்கு மட்டுமே கேட்கும் மணிஓசை போன்று உடலின் நரம்பு ஒவ்வொன்றிலும் இப்பாடலோசை ரீங்காரம் செய்யவேண்டும் என்பது என் ஆசை.

நன்றி

கோயமுத்தூர்
27.08.2012

அன்புடன்
றெங்க லெ. வள்ளியப்பன்

Laser Typeset at : LKM Computer Printers, Chennai - 17.
Phone : 99406 82929

Printed at : Swathi Creations, Chennai - 5

Koviloor Digital Library

3-2

கற்பகவிநாயகக் கவசம்

அண்டம் முதலே அறிவுப் பொருளே
ஆற்றல் அருளும் வேதத் திருவே
இடரே இன்றிக் காக்கும் துணையே
ஈகை நிலமே இன்பச் சுடரே
உள்ளே ஒளிரும் பேரொளி விளக்கே
ஊரும் நாடும் உலகும் நீயே
எழுத்தில் பொங்கும் கருத்துச் செறிவே
ஏழைக் கிரங்கும் கற்பகக் களிறே
ஐங்கரங் கொண்ட எங்குல அரசே
ஒளியே ஒளியே ஓவிய நிலவே
ஓங்கும் புகழே ஓமெனும் நிலையே
அன்பாம் உலகை ஆக்கும் கலையே
அடியேன் சரணம் சரணம் சரணம்!

அறிவே அறிவே அறிவே அறிவே
உறவே உறவே உறவே உறவே
பொறியே பொறியே பொறியே பொறியே
நெறியே நெறியே நெறியே நெறியே
அறங்கள் விளையும் வித்தே விளைவே
திறங்கள் பொழியும் முகிலே நலமே
பாடும் பொழுதே பாட்டில் வருவாய்
தேடும் செல்வம் தேடித் தருவாய்
புரியாத் துன்பம் அதிகம் அதிகம்
அருள்வாய் அருள்வாய் கவசம் கவசம்!



Koviloor Digital Library

மெய்யாம் மொழியே மேலாம் களிப்பே
வையக் குடையின் காவல் விளக்கே
வாரண முகத்தான் பாதம் காக்க
ஆரண முகத்தான் அன்பனைக் காக்க
அறிவிலார் தமையும் அற்புதன் காக்க
வறுமைகள் போக்கி கருணையன் காக்க
பாடும் உயிரை பிரணவம் காக்க
கூடும் மனதை முதலோன் காக்க
பொய்யாம் மனிதனைப் புகழோன் காக்க
கண்ணீர்ப் பெருக்கை கணபதி போக்க
கவலைகள் என்கிற கடலைத் தூர்க்க
நாதன் வருக நலமே தருக!

பெண்கள் வாழ்வும் பிள்ளைகள் வாழ்வும்
தகிடத் தகிடத் தகிடத் தகவென
தாக்கும் துன்பம் வேதனை ஓட
திகிடத் திகிடத் திகிடத் திகிடத்
தேங்கிய துயர்கள் இலையென தாக
பெருகப் பெருகப் பெருகப் பெருகிட
பேரருட் பொருளே அலையாய் வருக
ஆர்ந்த வேதக் கலையே வருக
ஐயன் சக்திப் பிள்ளாய் வருக
நவமா மணிகள் நல்குவன் வருக
புவியோர் வாழ்வில் பூரணம் நிறைக!

சிறியோன் துயரம் அதிகம் அதிகம்
அருள்வாய் அருள்வாய் கவசம் கவசம்
எங்கும் எதிலும் வஞ்சகம் சூது
ஏய்த்துப் பெருத்திடும் வாழ்நிலை மாற



Koviloor Digital Library

கமலா சனத்துக் கற்பகப் பெருமான்
திருவடி விழுந்தேன் சரணம் சரணம்
யானை முகனே மானிடன் சரணம்
விநாயக தேவனே வீரன் சரணம்
வான்மறைத் தலைவன் பொன்னடி சரணம்!

சொல்லினுக் கரிய மன்னா சரணம்
பார்வதி மைந்தா பாவலன் சரணம்
சிவனார் மகனே சிறியோன் சரணம்
உன்னைப் போலொரு துணைஎனக் கில்லை
என்னைப் போலொரு பக்தனு மில்லை
நம்மைப் போலொரு அன்பர் களில்லை
என்னிட மிருக்கிற தீமைகள் யாவும்
இன்றே அழிந்திட அருள்செய வருக
உமையாள் ஈன்ற ஐயா வருக
ஓமெனும் பொருளாய் ஆனவன் வருக!

மண்ணில் எழுந்த சுடரே வருக
கண்ணில் விளங்கும் கதிரே வருக
வித்தைக்கிறைவன் விரைந்தே வருக
உத்தம குணபதி தூயவன் வருக
பிள்ளையார் பட்டிப் பெருமான் வருக
கள்ளம் போக்கிய கடவுள் வருக
புதுச்செயல் காட்டிப் புரிவாய் பேரருள்
சதிச்செயல் அரக்கரைத் தீர்த்தழித் திடுக
குறைவைக் களையும் கோவே வருக
நிறைவைச் சேர்க்கும் நிமலா வருக!



வாயினில் மௌனம் வரந்தரு கைகள்
தூயவுன் பொன்னடி நாளும் புகழ்வோம்

Koviloor Digital Library

6

பல்லுரு வாகிப் படர்ந்த வானே
வல்லபக் கோனே வரந்தர வருக
பாதகர் தம்மை பூமியில் வென்றே
பக்தரைக் காக்கக் கணபதி வருக!

யாவரும் மகிழப் பாடம் சொல்வோய்
யாவரும் வாழ்ந்திட நல்லருள் புரிக
அபயம் அபயம் அபயம் கேட்டோம்
சபையில் வெல்லும் சமர்த்தெனக் கருள்க
காத்தருள் செய்வாய் கற்பக மூர்த்தி
காத்தருள் செய்வாய் கடவுளே எம்மை
எதையும் முடிக்கும் திறமெனக் கருள்க
முயற்சியைத் தொடரும் மனமெனக் கருள்க!

பசித்த வயிற்றுடன் உடுத்திட உடையும்
இல்லா மலிருக்கும் மக்களைப் பார்நீ
வேண்டினேன் வேண்டினேன் வேண்டினேன் உனையே
மனிதர்கள் தனக்குள் எத்தனை சுயநலம்
மனிதர்கள் தனக்குள் எத்தனை போட்டி
மண்ணில் நிம்மதி பணத்தால் மட்டுமா

மண்ணில் மகிழ்ச்சி பொருளா தாரமா
மகிழ்வே மனிதனின் முக்கியத் தேடலா
மகிழ்வை எமக்கே தயவுடன் அருள்க
யார் இவ்வுலகிலே வெற்றிகள் பெற்றவர்
யார் இவ்வுலகிலே ஆனந்த மானவர்
யார் இவ்வுலகிலே யாவும் பெற்றவர்
யாரால் எல்லாம் இயங்குது இயங்குது
யாவுக்கும் நீயே காரணம் அறிந்தேன்



Koviloor Digital Library

காரணம் இல்லாமல் கடவுளும் உண்டோ
காரணம் இல்லாமல் கவிதைகள் இல்லை
காரணம் இல்லாமல் காலங்கள் இல்லை

கருணா லயனின் கால்களை மறவேன்
தத்துவ மூர்த்தியின் கரிமுகம் மறவேன்
உன்னை நம்பியே உன்னிடம் வந்தேன்
என்னிடம் இருப்பதை உன்னிடம் வைத்தேன்
ஆனந்தம் நிறைந்தது களைப்பே இல்லை
தானிந்த உயிரில் ஒளியாய்ப் பெருக

வீணே காலம் போக்கி போக்கி
உடலும் மெலிந்து உளமும் நலிந்து
பயனே இலாமல் வாழ்ந்து திரிந்து
சுழன்று சுழன்று தாக்கும் பொய்யை
சலிப்பில் லாமல் பேசி அலைந்து
செய்த தப்பையே மீண்டும் செய்தே
வாழ்ந்தது போதும் போதும் கடவுளே

குழந்தைகள் வாழ்க்கை கோபுரம் ஆக
மனையற வாழ்வில் மாண்புகள் கூட
முன்னேற் றங்களே சாத்தியம் ஆக
சாதனைக் கான சாவி கொடுப்பாய்
நட்பும் அன்பும் நாளும் வளர்ந்து
உண்மையும் அறிவும் ஒன்றெனக் கலந்து
நன்மைகள் சேர்க்கும் மனிதனென் றாக
சோர்வில் லாமல் மனஞ்சிதை யாமல்
கலைமொழி மூலம் வெளிச்சம் காண
உள்ளே இருக்கிற ஒளிமிகக் கூட



Koviloor Digital Library

நான் அறிந் தவரிலே நானே மிகமிக
நல்லவன் ஆக இருந்திடல் வேண்டி
உண்டென் பார்க்கும் உள்ளொளி பெருக்கி
இல்லையென் பார்க்கும் நன்னெறி இயக்கும்
உன்னைப் பணிந்தேன் அறிவுத் தலைவா
எனைநீ காப்பாய் அறிவேன் அறிவேன்
ஊக்கம் கொடுத்து தட்டிக் கொடுத்து
உதவிகள் செய்வோர் யாருளர் உன்போல்.

வரவர வாழ்வில் பூரணம் கூட
மங்கள குணபதி தெளிவினை அருள்க
அங்குச பாசமுங் கொம்பும் தரித்தோய்
அன்பன் வாழ்வில் நீயே கவசம்
கவசம் கவசம் கவசம் கவசம்
வந்தது வாழ்வில் விநாயகன் கவசம்
வாழ்வினில் இல்லை இனிமேல் கலக்கம்.

கணபதி கணபதி கணபதி என்றிட
கவலைகள் தீரும் சுகம்பெற லாகும்
குணநிதி குணநிதி குணநிதி என்றிட
குணமது ஓங்கும் வளம்பெற லாகும்
வெற்றியே கணபதி வெற்றியே விநாயகா
வெற்றியே வெற்றியே வெற்றியே வெற்றியே
வெற்றியே வெற்றியே வெற்றியே வெற்றியே.



Koviloor Digital Library



Koviloor Digital Library

